**சுருக்கம்**

அரசியல் ஓய்வூதியம் – விடுதலைப் போராட்ட வீரர்கள், இந்திய தேசிய இராணுவ படையில் பணிபுரிந்தவர்கள் மற்றும் அவர்களின் தகுதியான வாரிசுதாரர்கள் – ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

**பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.603** **நாள்:02.09.2024**
**குரோதி வருடம், ஆவணி –17**
**திருவள்ளுவர் ஆண்டு –2055**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.2064, பொது (ஜெனெரல் –சி)த் துறை, நாள் 28.09.1966.
2. அரசாணை (நிலை) எண்.575, பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை, நாள் 25.08.2022.
3. அரசாணை (நிலை) எண்.572, பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை, நாள் 26.09.2023.

*******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 01.10.1966 முதல் அரசியல் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஆரம்பத்தில் மாதமொன்றிற்கு ரூபாய் 50/– வழங்கப்பட்டது. மேற்கண்ட ஓய்வூதியமானது, படிப்படியாக உயர்த்தப்பட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.20,000/–ஆக கடந்த 15.08.2022 முதல் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களான மனைவி / கணவர் / முதிர்வயதடையாத குழந்தைகள் ஆகியோருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.11,000/–ஆகவும் கடந்த 15.08.2023 முதல் உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.08.2024 அன்று நடைபெற்ற 78–வது சுதந்திரத் திருநாள் விழாவின்போது, சென்னை, தலைமைச் செயலகத்தின் கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்த பின் ஆற்றிய உரையில், இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தனது இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல்களை சிறப்பிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் ரூ.20,000/– லிருந்து ரூ.21,000/–ஆக உயர்த்தப்படும் எனவும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப

(த.பி.பா)

ஓய்வூதியம் ரூ.11,000/-லிருந்து ரூ.11,500/-ஆக உயர்த்தி வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூ.20,000/-லிருந்து ரூ.21,000/-ஆகவும் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு குடும்ப ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூ.11,000/-லிருந்து ரூ.11,500/-ஆக உயர்த்தியும், வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேற்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுவதால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.29,55,000/- (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இந்த ஓய்வூதிய உயர்வானது 15.08.2024 முதல் நடைமுறைக்கு வருகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235- சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் - 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் - மாநிலச் செலவினங்கள் - AF விடுதலைப் போராட்ட வீரர்கள், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியங்கள் - 327 ஓய்வூதியங்கள் - 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்" (IFHRMS த.தொ.கு.2235 60 102 AF 32705).

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.29,55,000/- 2024-2025-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2024-2025-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து, சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட அரசு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2024-2025-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதித் [வருவாய்/ வ.செ.பொ-I]த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 8218852-A/வருவாய்/2024, நாள்: 02.09.2024-இல் பெறப்பட்ட

இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0743(எழுநூற்று நாற்பத்து மூன்று). (IFHRMS ASL NO.2024090743)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ரீட்டா ஹரீஷ் தக்கர்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாக ஆணையரகம்,
எழிலகம் கட்டிடம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
ஆணையர், கருவூலம் (மற்றும்) கணக்குத் துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம், 3–வது மாடி,
அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஓய்வூதியம் வழங்கல் அலுவலர்,
ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகம்,
அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை–35. (பெயரில்)
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 09.

<u>நகல்:</u>
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–09. (கோப்பு எண்.5465/அ.ஓ.2/2024).
நிதி (ஜி.பி.சி/பல்வகை (பொது) /ஓய்வூதியம்)த் துறை, சென்னை–09.
நிதி (வரவு செலவு –பொது–I–II)/வ.வ.1/வருவாய்)த் துறை, சென்னை–09.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (வரவு செலவு)த் துறை, சென்னை–09.
பொது (அரசியல் ஓய்வூதியம்.1 மற்றும் 3)த் துறை, சென்னை–09.
பொது (பல்வகை)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
பொது ( அ.ந.மு.I)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
இ.கோ/உபரி.

**//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//**

02/09/2024

**பிரிவு அலுவலர்**
02/09/2024